Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MARCH 11 2025

செவ்வாய்க்கிழமை 11, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர் 176 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# செவ்வந்திக்கு 'கயிறு' கொடுத்தவர் சிக்கினார்



'கணேமுல்ல சஞ்சீவ' கொலையின் பின்னணியில் உள்ளதாகக் கூறப்படும் இசாரா செவ்வந்தி, திக்வெல்லவில் உள்ள ஒரு வீட்டில் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு தவறான தகவலை வழங்கிய திக்வெல்லவைச் சேர்ந்த செங்கல் தொழிலாளியை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவெல திங்கட்கிழமை (10) உத்தரவிட்டார்.

கடுமையான குற்றம் தொடர்பான விசாரணையின் போது பொலிஸாரை தவறாக வழிநடத்தியதாகவும், அவர்களைத் தடுத்ததாகவும் கொழும்பு குற்றப்பிரிவு தாக்கல் செய்த முறைப்பாட்டைப் பரிசீலித்த பின்னர், சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்க மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# "வடக்கு கிழக்கு ஆசிரியர்களை மலையகத்துக்கு அனுப்புக"

வடக்கு, கிழக்கில் உள்ள ஆசிரியர்களை மலையகப் பகுதிகளில் சேவைக்கு அமர்த்தி கல்வியை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.


2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்காக இம்முறையே அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்விக்கு எமது அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும்.



ர்பில்

தொடர்ச்சி P2

# தலவில விபத்தில் மூன்று பேர் பலி



■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கல்பிட்டி, தலவில பகுதியில் இருந்து மினுவாங்கொடை பகுதியை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று ஞாயிற்றுக்கிழமை(09) இரவு மாதம்பை - கலஹிடியாவ பகுதியில் வைத்து பஸ்ஸூடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுமி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் ராகம மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய தாயும், அவரது ஒரு வயதுடைய மகளும், 36 வயதுடைய உறவினர் முறை பெண்ணொருவரும் என மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### கொழும்பில் தேசியப் பாடசாலை

# "தமிழ் பிரிவுகளில் வகுப்புகள் குறைப்பு"

கொழும்பில் மூன்று பிரதான தேசியப் பாடசாலைகளில் தமிழ் பிரிவுக்களில் வகுப்புகள் குறைக்கப்பட்டு வருகின்றன என்றும், இதற்கு இடமளிக்காது அங்கே தமிழ் வகுப்புகளை அதிகரிக்கவும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கேட்டுக்கொண்டார்.

தமிழ் பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளில் தமிழ் பிரிவுகளையும் ஒன்றாக சேர்த்து பிரத்தியேகமாக வலயமொன்றை அமைக்கவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

கொழும்பில் மூன்று பிரதான தேசியப் பாடசாலைகளான இசிபத்தானை கல்லூரி, ரோயல் கல்லூரி மற்றும் சேனாநாயக்க கல்லூரி ஆகியவற்றில் தமிழ் பிரிவுக்கான வகுப்புகள் குறைக்கப்பட்டு வருகின்றன. அதாவது ரோயல் கல்லூரியில் ஆரம்பப்பிரிவில் 8 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகளே உள்ளன. 6 முதல் 11ஆம் தரம் வரையில் 7 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகளே உள்ளன.

சேனநாயக்க கல்லூரியில் ஆரம்பப்பிரிவில் 6 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் ஒரு வகுப்பே உள்ளது. 6 முதல் 11ஆம் தரம் வரையில் 7 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகளே உள்ளன.

இசிபத்தனா கல்லூரியில் ஆரம்பப்பிரிவில் 6 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் ஒரு வகுப்பே உள்ளது. 6 முதல் 11ஆம் தரம் வரையில் 6 சிங்கள மொழி மூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் ஒரு வகுப்பே உள்ளது.

பல இனங்கள் இணைந்து வாழக்கூடிய கொழும்பு போன்ற மாவட்டங்களிலேயே தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். நாங்கள் இத்தகைய மாவட்டங்களில் தமிழ் பாடசாலை, சிங்கள பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, இந்து பாடசாலை, பௌத்த பாடசாலை, கத்தோலிக்க பாடசாலைகள் என்று ஆரம்பித்து விட்டு சிறுவயதிலேயே பிள்ளைகளை இன ரீதியாகப் பிரித்து வைத்து விட்டு 18 வயது ஆன பின்னர் இளைஞர்களாக எழுந்திடுங்கள் என்று கூறுகின்றோம். இது பிழையானது. ஒரே கூரையின் கீழ் அனைத்து இனப் பிள்ளைகளும் படிக்கும் வசதிகளை ஏற்படுத்துங்கள். இங்கிருந்து ஆரம்பியுங்கள்.

அதேபோன்று, யாழ்ப்பாணத்தில் சிங்க மகா வித்தியாலயம் உள்ளது. அது தேவையில்லை என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அங்கு யாழ். இந்துக் கல்லூரி மற்றும் மத்தியக் கல்லூரி உள்ளன. அவற்றில் சிங்களப்பிரிவை ஆரம்பித்து இந்த மகா வித்தியாலயத்தைச் சேர்த்துவிடுங்கள். இதன்மூலம் ஒரே கூரையில் தமிழ், சிங்கள பிள்ளைகள் படிப்பார்கள் என்றார்.



# "இணைந்து, இணைந்து டெலோ போட்டியிடும்"

■ ரொசேரியன் லெம்பேட்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், யாழ். தேர்தல் தொகுதியில் இணைந்தும் வடக்கு,கிழக்கில் ஏனைய இடங்களில் இணைந்தும் போட்டியிட உள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் மாத்திரம் இணைந்து போட்டியிடும் என்றும், யாழ். தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து ரெலோ போட்டியிடும் என்றார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிடவுள்ளது என்றார்..

அவற்றுக்கான கட்டுப் பணத்தைச் செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஒட்டு மொத்தமாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து சபைகளிலும் போட்டியிடும் என்றார்.



தொடர்ச்சி P2

# கனேடிய மாணவி கைது

கனேடியப் பெண் ஒருவர் பயணப் பொதியில் மறைத்து வைத்திருந்த 175 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹஷீஷ் போதைப்பொருளுடன் ஞாயிற்றுக்கிழமை (09) இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கனேடிய இளங்கலை பட்டம் பெறவிருக்கும் 20 வயதுடைய மாணவி என்பதோடு, இவர் இலங்கைக்கு வருகைதரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

அவர் கனடாவின் டொராண்டோவிலிருந்து இந்த போதைப்பொருளுடன் அபுதாபிக்கு வந்திருந்தார். அங்கிருந்து, இரவு 8.35 மணிக்கு எதிஹாட் எயார்வேஸ் விமானம் EY-396 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதியில் 3 போர்வைகளில் சுற்றப்பட்ட 17 கிலோ கிராம் 573 கிராம் ஹஷீஷ் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இளம் பெண்ணும் அவர் கொண்டு வந்த போதைப்பொருள் உள்ளிட்ட பொருட்கள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# "தேவையில்லாத ஆணிகளை பிடுங்காதீர்கள்"





உங்கள் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள். எங்களுடைய பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்களுடைய மதம் சார்ந்த விடயங்களில் தலையிட வேண்டாம் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை கேட்டுக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் சாலி நழீம், தேவையான ஆணிகளை பிடுங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# தனித்தும் இணைந்தும் செல்கிறார் இராதா



■ ரஞ்சித் ராஜபக்ஷ

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சில மன்றங்களில் தனித்தும், இன்னும் சில மன்றங்களில் இணைந்தும் போட்டியிடுவதற்கு மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளதாக முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# "பேச்சு இடைநிறுத்தம்: தமிழரசு தனிவழி"

■ பாறுக் ஷிஹான்த

மிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடும் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி இம்முறை தனித்தே போட்டியிடுகின்றது எனவும் எதிர்வரும் வாரத்திற்குள் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தமிழரசு கட்சி பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களின் கலந்துரையாடல் அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பகுதியில் சனிக்கிழமை(08) இரவு பொத்துவில் தொகுதி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.கோடீஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# செவ்வந்திக்கு 'கயிறு' கொடுத்தவர் சிக்கினார்

இந்நிலையில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க கருத்துரைக்கையில், பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்ல சஞ்சீவ' படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் முக்கிய சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி, இந்தியாவுக்குத் தப்பிச் செல்லவில்லை என நம்பப்படுவதாகக் கூறினார்.

செவ்வந்தி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக சமூகத்தில் பரவி வரும் வதந்திகளைக் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"செவ்வந்தி நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனைத்து வழிகளும் சம்பவ தினமான பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி சில மணி நேரத்திற்குள்ளே அடையாளம் காணப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு" என்றார். புலனாய்வுக் குழுக்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு தகவலையும் ஆராய்ந்து வருகின்றனர். இவ்வாறான சம்பவங்களின் போது, பல்வேறு வதந்திகள் பரப்பி விசாரணைகளைத் திசை திருப்புவதற்காக சிலர் இதுபோன்ற தகவல்களை வெளியிடுகின்றனர். செவ்வந்தியை கைது செய்வதற்குப் புலனாய்வுக் குழுக்கள் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்" என குறிப்பிட்டுள்ளார்.

# "இணைந்து, இணைந்து டெலோ போட்டியிடும்"

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம் பெறும் வழக்கு விசாரணை மீளப் பெற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில், அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே, மன்னார் பிரதேச சபை தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராக உள்ளோம் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் மாத்திரம் ஒரு கூட்டாக இத் தேர்தலில் போட்டியிட உள்ளது.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது.

9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம் என்றார்.

எனினும், இக்கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கிறது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் கட்சி தனித்துப் போட்டியிட உள்ளது.

ஐங்கரநேசனின் கட்சி தனித்து போட்டியிடுகின்றதா? இல்லையா? என்று தெரியவில்லை.

எனினும், இந்த அணியில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார் என்றார்.



# "தேவையில்லாத ஆணிகளை பிடுங்காதீர்கள்"





பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேவையான ஆணிகளை புடுங்குங்கள், தேவையில்லாத ஆணிகளை புடுங்க வேண்டாம் என்றும் அர்ச்சுனா எம்.பியிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) மாலை ஒழுங்கு பிரச்சினை எழுப்பி உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சிறிய விளக்கமொன்றை முன்வைத்தார்.

"நாங்கள் எந்த மதத்தையும் நிந்திக்கவில்லை. முஸ்லிம் பெண்களிடமிருந்து வந்த கோரிக்கையையே இங்கு முன்வைத்தேன். அதேபோல, மேலே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்கள் முன்வைத்த கூற்றுக்களை ஏற்றுக்கொள்கின்றோம். முஸ்லிம்கள் எங்கள் இரத்தம் என்றார்.

# "வடக்கு கிழக்கு ஆசிரியர்களை மலையகத்துக்கு அனுப்புக"

ஆட்சியாளர்களால் கல்விக்கான திட்டங்களை முன்னெடுத்தாலும், மலையகம் தொடர்பில் பின்னடிப்பையும் பாரபட்சத்தையும் காட்டியதை அவதானிக்கலாம். மலையகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன. பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்கள் மற்றும் வளங்கள் பகிர்வில் பாரபட்சம் உள்ளன. மலையகத்தில் நாங்கள் இன்னும் பின்னடைவிலேயே இருக்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இராதாகிருஸ்ணன் மலையக பாடசாலைகள் தொடர்பில் பல திட்டங்களை முன்னெடுத்திருந்தார். அவை தொடர்பில் அவருக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதத்தைப் போதிக்கும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகள் இல்லை. இது தொடர்பில் இன்னும் கவனம் செலுத்தப்படவில்லை.

அத்துடன், ஆசிரியர் நியமனங்களின் போது, தேவைக்கு ஏற்றவாறும், பற்றாக்குறையை நிரப்பும் வகையிலும் நியமனங்கள் இடம்பெறுவதில்லை. தமிழ் மொழி மூல பட்டதாரிகள் இதன்போது புறக்கணிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று

> **ஆசிரியர் நியமனங்களின் போது, தேவைக்கு ஏற்றவாறும், பற்றாக்குறையை நிரப்பும் வகையிலும் நியமனங்கள் இடம்பெறுவதில்லை. தமிழ் மொழி மூல பட்டதாரிகள் இதன்போது புறக்கணிக்கப்படுகின்றனர்**

இருப்பதால், அந்த தீர்ப்பு வெளியானதும் அது தொடர்பில் செயற்பட்டு ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்போம். பல பாடசாலைகளில் பதில் அதிபர்களே இருக்கின்றனர். இதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். ஆசிரியர் பயிற்சி நெறிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று, வடக்கு, கிழக்கில் உள்ள ஆசிரியர்களை மலையகப் பகுதிகளில் சேவைக்கு அமர்த்தி கல்வியை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னும் எமது சமூகம் இருளிலேயே இருக்கின்றது. கடந்த காலங்களில் அரசாங்கங்கள் சிறந்த முறையில் கல்வியை வழங்காமையே காரணமாகும். இப்போது நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து கல்வியைக் கட்டியெழுப்புவோம் என்றார்.

# தென்னகோனின் ரிட் மனு ஒத்திவைப்பு

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கைது பிடிவிராந்தை இரத்து செய்ய உத்தரவிடக் கோரி, பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனது சட்டத்தரணி மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதியரசர்களான முகமது லாஃபர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய அமர்வு, திங்கட்கிழமை (10) அன்று விசாணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போது, தேசபந்து தென்னக்கோனின் ரிட் மனுவை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தன்னை கைது செய்யுமாறு நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தனது சட்டத்தரணி ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாதது பாரதூரமான குற்றம்"

■ *கீத்*

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பது பாரதூரமான குற்ற செயலாகும் என இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் விவாதத்தில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்க் கல்வி அமைச்சு தொடர்பாக விவாத உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்

இந்த நாட்டில் கல்வித் துறையை மேம்படுத்த வேண்டுமாயின், பாடத்திட்டம், கற்பித்தல் முறைமை, ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு முதலியவற்றில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அத்தோடு, நிதி ஒதுக்கீடு, ஆளணி மற்றும் பௌதீக வளப்பற்றாக் குறைக்கும் தீர்வு காண வேண்டும்.

நமது நாட்டில் உள்ள மாணவர் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்வியை கற்கின்றனர். இதன் பொருட்டு ஆண்டு தோறும் அண்ணளவாக 265,000 மாணவர்கள் க.பொ.த உயர்தர தேர்வுக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 165,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற தகுதி பெறுகின்றனர். தகுதி பெற்றோரில் 40,000 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. மேலும், 10,000 மாணவருக்கு கல்வியற் கல்லூரி அனுமதி கிடைக்கிறது.

தேர்வில் வெற்றி பெறாத 100,000 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்று அனுமதி கிடைக்காத 115,000 மாணவர்களும் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறி நிற்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கும் சமூகத்திற்கும் உண்டு.

நமது நாட்டின் கல்வி முறையானது தொழில் சந்தையோடு இணைந்ததாக இல்லை. அதாவது தொழில் சந்தையில் வேலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குரிய Qualification Skills and experience அவர்களிடம் இல்லை. இதனால் பட்டதாரிகள் தொழிற் சந்தையில் வேலையை பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

எனவே, நம் நாட்டு பாடத் திட்டங்களைத் தொழிற் சந்தைத் தேவைகளோடு இணைந்ததாக மாற்றி அமைக்க வேண்டும். மேற்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமது மாணவர் உலகத்தொழில் சந்தையில் போட்டிபோட்டுவேலையைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் ஆயிரக்கணக்கான பட்டப் படிப்புகளை நடத்துகின்றன.

இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 206 பில்லியன் ரூபாய் மீண்டெழும் செலவுக்காகவும் 65பில்லியன் ரூபாய் மூலதன செலவுக்காகவும் மொத்தமாக 271 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 11 பில்லியன் ரூபாய் கூடுதலானது ஆகும்.

இந்த அதிகரிப்பு கல்வித் துறையை பொறுத்தவரை போதுமானது அல்ல. மொத்தப் பாதீட்டில் கல்விக்கான ஒதுக்கீடு 6.4 வீதமாக உள்ளது. இது குறைந்தது 10 வீதமாக ஆவது உயர்த்தப்பட வேண்டும்.

ஆசிரியர் அபிவிருத்திக்கு இந்த ஆண்டில் 6.13 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த சிக்கலை தீர்ப்பதற்கு கல்வியற் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து பயிலுநர்களைத் தெரிவு செய்தால் இந்த சிக்கலைத் தீர்க்கலாம்.

பொது நிருவாக அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அந்தந்த பிரதேச செயலாளரின் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றது. இதே முறையை கல்வி அமைச்சும் பின்பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம். இது குறித்த ஒரு கொள்கை முடிவை அரசு விரைவில் எடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

ஆசிரியர் பற்றாக்குறையோடு பாடசாலைகளை நடத்துவது வருங்கால தலைமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு குற்றச் செயலாகும். தொடர்ந்தும் இவ்வாறான வெற்றிடங்களை விட்டுக் கொண்டிராமல் அவற்றை நிரப்ப ஆவண செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் 195 பாடசாலைகள் அதிபர் இல்லாமல் இயங்குகின்றன. இது மட்டும்ல்லாமல், 73 கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் (SLEAS) வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

அதேபோல, 15 பாடசாலைகள் வெள்ளப் பேரிடர் ஆபத்தோடு காணப்படுகிறன. இத்தோடு யானை தாக்குதல் அபாயத்திற்கு உள்ளாகக் கூடியவாறு 33 பாடசாலைகள் காணப்படுகின்றன. இடர்களில் இருந்து பாடசாலையை பாதுகாப்பதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். இந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் நாட்டினது கல்வித் துறையின் வளர்ச்சிப் பாதை வினைத்திறனுடன் செயற்படும் என்றார்.

# தலவில விபத்தில் மூன்று பேர் பலி

கல்பிட்டி - தலவில தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர், மீண்டும் தலவில பகுதியில் இருந்து மினுவாங்கொடை பகுதிக்கு டீசல் ரக முச்சக்கர வண்டி ஒன்றில் சென்று கொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்ற போது, முச்சக்கர வண்டியில் சாரதிக்கு மேலதிகமாக சிறுவர்கள் உட்பட ஏழு பேர் பயணித்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முச்சக்கர வண்டியில் பயணம் செய்த அனைவரும் காயமடைந்த நிலையில்,

> **முச்சக்கர வண்டியில் பயணம் செய்த அனைவரும் காயமடைந்த நிலையில், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அதில் மூவர் உயிரிழந்துள்ளனர்**

சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அதில் மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாதம்பை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தனித்தும் இணைந்தும் செல்கிறார் இராதா



ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுடன் இணைந்து போட்டியிட முன்னணி முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தினக் கொண்டாட்டம் ஹட்டனில் உள்ள அதன் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) அன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை, இரத்தினபுரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் தனது கட்சி தனித்து போட்டியிட முடிவு செய்துள்ளதாக கூறிய அவர், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை மலையக மக்கள் முன்னணி கைப்பற்றும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

> **எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை மலையக மக்கள் முன்னணி கைப்பற்றும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்**



# "பேச்சு இடைநிறுத்தம்: தமிழரசு தனிவழி"

இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் கல்முனைத் தொகுதி தலைவர் அ.நிதான்சன் சம்மாந்துறை தொகுதியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான த.கலையரசன் மற்றும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களும் கலந்து கொண்டு தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

இதன்போது, உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளும் கைப்பற்றப்படல் வேண்டும், பெண்கள் பிரதிநிதித்துவம், இளைஞர்களுக்குத் தேர்தலில் பங்கேற்க வாய்ப்பு வழங்குதல் உட்பட இலங்கை தமிழரசுக் கட்சியானது இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், வேட்பாளர்கள் தெரிவு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

> **அம்பாறையில் உள்ள அனைத்து சபைகளும் கைப்பற்றப்படல் வேண்டும், பெண்கள் பிரதிநிதித்துவம், இளைஞர்களுக்குத் தேர்தலில் பங்கேற்க வாய்ப்பு வழங்குதல் உட்பட இலங்கை தமிழரசுக் கட்சியானது இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது**



# “2026 இல் புதிய கல்வி சீர்திருத்தம்”

புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்றும், இதற்கான தயாரிப்பு செயல்முறை 2025ஆம் ஆண்டில் நடைபெறும் என்றும் பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழு அவருடைய தலைமையில் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியபோது பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதன்போது, புதிய கல்வி மறுசீரமைப்பு ஐந்து பிரதான தூண்களின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இதற்கு அமைய, புதிய பாடநெறியை அறிமுகப்படுத்தல், மனிதவளத்தை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பொது மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் உரிய மதிப்பாய்வு மேற்கொள்ளல் போன்ற பிரதான விடயங்களின் கீழ் இந்தக் கல்வி மறுசீரமைப்பு தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான மாணவர்களுக்காக 2026ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்வி, உயர்கல்வி மற்றம் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்களை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கு அமைய, கல்வி மறுசீரமைப்பு, பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளக் குறைபாடுகள், பாடசாலைகளில் இடைத்தர வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதித்தல், கல்விச் சபையை நிறுவுதல், உயர் கல்விப் பிரிவு, திறன்கல்விப் பிரிவு ஆகியவற்றின் கீழ் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த அமைச்சுத் தொடர்பில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் காணப்படும் விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# தேங்காய் எண்ணெய்யுடன் இருவர் கைது

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, மாசடைந்த சுமார் 15,620 லீற்றர் தேங்காய் எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறியுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் அரலகங்வில முகாம் தெரிவித்துள்ளது.

விமானப்ப டையினரிடமிருந்து கிடைத்த புலனாய்வுத் தகவலை அடுத்து, அரலகங்வில பொலிஸ் சிறப்புப் படையின் பொறுப்பதிகாரி மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்களால் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, கொழும்பிலிருந்து பொலன்னறுவைக்கு கொண்டு செல்லப்பட்ட மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறியை மின்னேரியா பகுதியில் சோதனை செய்தபோது, வைக்கோலால் செய்யப்பட்ட சாக்குகளால் மூடப்பட்டிருந்த 35 பீப்பாய்கள் மாசுபட்ட தேங்காய் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.

லொறி, தேங்காய் எண்ணெய் கைப்பற்றப்பட்டதுடன், இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுகளிலிருந்து விலங்கு எண்ணெய்யை உற்பத்தி செய்யும் பொலன்னறுவை பகுதியில் உள்ள ஒரு நிறுவனத்திற்குத் தேங்காய் எண்ணெய் கொண்டு செல்லப்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

பின்னர், பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் அந்த இடத்தை ஆய்வு செய்த போது, மேலும் 35 பீப்பாய்கள் மாசுபட்ட தேங்காய் எண்ணெய்யைக் கைப்பற்றியுள்ளனர்.

# தங்கையை வன்புணர்ந்த மைத்துனர் கைது

அக்காவின் அறைக்கு அழைத்துச் சென்று, தங்கையை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் மைத்துனர் (தனது மாமாவின் மகன்) கைது செய்யப்பட்ட சம்பவம் வெல்லவாய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜனவரி 23 ஆம் திகதி முதல் பிப்ரவரி 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்ளே இவ்வாறு அந்த சிறுமி வன்புணரப்பட்டுள்ளார்.

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரசேகர கிராம பகுதியில் 13 வயதுடைய சிறுமியே பாதிக்கப்பட்டுள்ளார். அவரை பாலியல் வன்கொடுமை செய்த 29 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் .

ஜனவரி 23 ஆம் திகதி முதல் பிப்ரவரி 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் , குறித்த சிறுமி பாடசாலைக்குச் சென்று வந்து வீட்டிலிருந்தபோதெல்லாம் அவரின் மைத்துனரான (தனது மாமாவின் மகன்) சந்தேக நபர் வீட்டுக்கு வந்து சிறுமியை அவரது மூத்த சகோதரியின் அறைக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு, வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# “கூட்டணியாக செயற்படத் தீர்மானம்”

■ யது பாஸ்கரன்

ஒரு தேர்தல் கூட்டாக இல்லாமல், தொடர்ந்து பயணிக்கக் கூடிய ஓர் அரசியல் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து கூட்டணியாக செயல்பட தீர்மானித்து இருக்கிறோம் என பொருட்டு சமத்துவ கட்சியின் அமைப்பாளர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணத்தை கிளிநொச்சி மாவட்ட தேர்தல் செயலகத்தில் திங்கட்கிழமை(10) செலுத்தியுள்ளார்

இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் சார்பில் போட்டியிடும் பொருட்டு சமத்துவ கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அதாவது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியிலே ஏழு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன தமிழ் மக்கள் பரவலாக ஒற்றுமை பற்றியும் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற அவர்களது அபிலாசைகளின் அடிப்படையில் இது ஒரு தேர்தல் கூட்டாக அல்லாமல் தொடர்ந்தும் பயணிக்கக் கூடிய ஒரு அரசியல் கூட்டாக தமிழ் மக்களின் அடிப்படை நாளாந்தப் பிரச்சனை உட்பட தமிழ் மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளை தொடர்ந்து கூட்டணியாக முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்து இருக்கிறோம் என்றார்.



# ஹட்டனில் பெண் கைது

■ எஸ்.கணேசன்

ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைவாக சந்தேக நபரான பெண் ஒருவர் திங்கட்கிழமை (09) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ஹட்டன் ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் பதுளை, கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களை ஏமாற்றி, கவர்ச்சிகரமான வட்டிக்கு பணம் தருவதாக பேஸ்புக்கில் விளம்பரம் செய்து, சுமார் 4.5 மில்லியன் ரூபாவை பெற்று, பணத்தைச் செலுத்தாமல் தலைமறைவாகி இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அலோ பிளாக் இலங்கைக்கு வருகை



இசைக்கு அப்பால் பரந்துபட்ட மிக முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற பாடகர், பாடலாசிரியர் மற்றும் தொழில்முனைவோர் அலோ பிளெக் (*Aloe Blacc*) மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு திங்கட்கிழமை (10) காலை இலங்கைக்கு வருகை தந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் கோமிக-உடுகமசூரிய மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் அதிகாரிகள் ஆகியோர் அலோ பிளெக்கிற்கு அமோக வரவேற்பளித்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பிளெக், இலங்கை முதலீட்டிற்கு ஒரு கவர்ச்சிகரமான இடம் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதில் ஒரு பங்காளராக இருக்க விரும்புவதாகவும், இலங்கை அரசாங்கத்துடனும் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டத்திற்கான ஆரம்ப கட்ட திட்டங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட இது சிறந்த வாய்ப்பு என்றும் கூறினார்.

தற்பொழுது காணப்படும் மற்றும் புதிய நிறுவனங்கள் ஆகிய இரு பிரிவுகளும் உள்ளடங்கியதாக இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு முதலீடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் புதிய கருத்துக்களை மேற்பார்வை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது மிகவும் தனித்துவமானது என்று குறிப்பிட்ட அலோ பிளெக், அமெரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள பல முதலீட்டாளர்களுடன் தான் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பதாகவும், இலங்கையில் காணப்படும் மூலங்கள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடத் தான் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

அவரின் *‘I Need a Dollar’* (‘ஐ நீட் எ டாலர்’) மற்றும் *‘Wake Me Up’*(வேக் மீ அப்’) போன்ற பாடல்கள் உலகளவில் மிகவும் பிரபலமான பாடல்களாகும். அலோ பிளெக்கின் எமது நாட்டுக்கான வருகை உயிரியல் தொழில்நுட்பம், சுகாதார சேவை புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

இலங்கையில் மூன்று நாள் தங்கியிருக்கும் அவர், உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும் கலைஞர்களைச் சந்தித்து, கலாசார மற்றும் அறிவியல் துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்தவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்கள் நடத்த உள்ளதோடு இலங்கை கருவா, மரமுந்திரிகை உற்பத்திகள், தெங்கு சார்ந்த பொருட்கள், சேதனப் பொருட்கள், சக்திதரும் இயற்கை பானங்கள், உணவு மற்றும் விவசாயம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற உள்ளூர் தொழில்முனைவோரையும் சந்திக்க உள்ளார். இது தவிர அலோ பிளெக் உயிரியல் தொழில்நுட்ப நிபுணர்களுடனும் முதலீட்டாளர் மாநாடுகளிலும் பங்கேற்க இருக்கிறார். மேலும் புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள் மற்றும் புத்தாக்குநர்களுடன் பல சந்திப்புகளிலும் அவர் பங்கேற்க உள்ளார். சீகிரிய, மின்னேரியா உள்ளிட்ட கலாசார முக்கியத்துவம்வாய்ந்த இடங்களையும் பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது.

இசை, தொழில்முனைவு மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளில் ஆலோ பிளெக் மிகுந்த முகாமைத்துவத்துடன் ஈடுபட்டு வருகிறார். ஒரு விஞ்ஞானியாக வர ஆசைப்பட்ட அவர் 2022ஆம் ஆண்டு கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான உயிரியல்த் தொழில்நுட்ப தீர்வுகளில் விசேட கவனம் செலுத்தி *Major Inc.* நிறுவனத்தை ஆரம்பித்தார். அமெரிக்க கடற்படை வீரரான ஆலோ பிளெக்கின் தந்தையின் ஊக்கத்தினால் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், தற்போது உலகின் முன்னணி விஞ்ஞானிகளுடன் இணைந்து வைரஸ் தொற்றுகளை எதிராக செயற்பட்டு வருகிறது.

உயிரியல் தொழில்நுட்பத்திற்கு அப்பால், புத்தாக்கம் மீதான அவரின் ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் பொலிகிராப் மற்றும் ஜிரோப்டிக் போன்றதொழில்நுட்ப வர்த்தகங்களிலும் அவர் முதலீடு செய்துவருகிறார்.

இந்த வணிக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, அலோ பிளெக் இசை மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார். அவரது அண்மைய இசைவெளியீடான *Stand Together* -2025 ஊடாக , ஒற்றுமை மற்றும் தாங்கும் இயலுமையை ஊக்குவிக்கிறது.

அலோ பிளெக்கின் இலங்கை விஜயம் அவரது இசை நிபுணத்துவத்தை மட்டுமல்ல, புத்தாக்கம், அறிவியல் மற்றும் சமூகப் பொறுப்பு மீதான அவரது ஆர்வத்தையும் எடுத்துக்காட்டுகிறது.



# வீதியோரத்தில் குவா... குவா...

வீதியோரத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில், சுமார் இரண்டு மாதங்களேயான ஆண் சிசுவை, பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பலாங்கொடை, மாதம்பே, தேவகொட பகுதியில் வீதியோரத்தில் கைவிடப்பட்ட நிலையிலேயே அந்த சிசு, திங்கட்கிழமை (10) காலை மீட்கப்பட்டுள்ளது.

குவா... குவா... என்று அழுது கொண்டிருந்த இந்த சிசு, உடனடியாக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சிசுவின் உடல்நிலை மிகவும் நன்றாக இருப்பதாக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சஞ்சீவ படுகொலை: பிரதான நீதவானிடம் வாக்குமூலம்



வழக்கறிஞராக மாறு வேடமிட்டு நீதிமன்ற அறைக்குள் நுழைந்து பாதாள உலகத் தலைவர் ‘கனேமுல்ல சஞ்சீவ’வை படுகொலை செய்தமை தொடர்பான மற்றொரு வலுவான நேரில் கண்ட சாட்சி, அப்போது நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கிய பிரதான நீதவானிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கொழும்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரிடம் இருந்து எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெற்ற பிறகு பிரதான நீதவானிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வாக்குமூலத்துடன், கனேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக கொழும்பு குற்றப்பிரிவால் நடத்தப்படும் விசாரணைகள் தொடர்பாகக் கிட்டத்தட்ட 50 நபர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

கொலை உள்ளிட்ட ஏராளமான குற்றங்களில் ஈடுபட்ட பாதாள உலகக் கும்பல் தலைவரான சஞ்சீவ குமார சமரத்ன எனப்படும் கனேமுல்ல சஞ்சீவ, பெப்ரவரி 19 ஆம் திகதி பூசா சிறைச்சாலையிலிருந்து கொழும்பு அளுத்கடை நீதவான் நீதிமன்ற இலக்கம் 5 க்கு அழைத்து வரப்பட்டார்.

அதன்பின்னர், வழக்கறிஞர் வேடமிட்டு நாற்காலியில் அமர்ந்திருந்தவர், திடீரென தனது இருக்கையிலிருந்து எழுந்து, சஞ்சீவ குமார சமரத்னவை நெருங்கி, துப்பாக்கிச் சூடு நடத்தி, துப்பாக்கியை அந்த இடத்திலேயே கைவிட்டுத் தப்பிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிபர், ஆசிரியர்களை உள்ளே விடாமல் ஆர்ப்பாட்டம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி பெற்றோர்களால் குறித்த பாடசாலை வாயிலுக்கு முன்பாக திங்கட்கிழமை(09) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், கோட்டக் கல்வி அலுவலகத்திலிருந்தோ, வலயக் கல்வி அலுவலகத்திலிருந்தோ அதிகாரிகள் வந்து தமக்கான பதிலைத் தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மல்லாவி பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு மாணவர்களைப் பாடசாலை வளாகத்துக்குள் அனுப்பிய போதும், அதிபர் ஆசிரியர்களை உள்ளே செல்ல ஆர்பாட்டகாரர்கள் அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த இடத்திற்கு அதிகாரிகள் வரும் வரை தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.





# அமைதியாக பார்வையைத் திருடும் கண் அழுத்த நோய்

ஒவ்வொரு நபரும் தங்கள் கண்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல்வேறு நோய்கள் உங்கள் பார்வையை மட்டும் பாதிக்காது, ஆனால், முழுமையான குருட்டுத்தன்மைக்கு கூட வழிவகுக்கும். கிளௌகோமா என்பது ஒரு நபரை நிரந்தரமாக குருடாக்கி, அமைதியாக அவர்களின் பார்வையை பறிக்கும் ஒரு நோயாகும்.

கண்ணுக்குள் இருக்கும் மென்மையான திசு திரவம் அக்வஸ் ஹ்யூமர் என்று அழைக்கப்படுகிறது. இந்த திரவம் கண்ணின் ஆரோக்கியத்திற்கு தேவையான ஊட்டச்சத்தை வழங்குகிறது. இந்த திரவத்தின் வெளியேற்றம் தடுக்கப்பட்டால், கண்ணில் அழுத்தம் அதிகரிக்கிறது. கண் அழுத்தம் காரணமாக விழித்திரை சேதமடைவதால் ஏற்படும் பார்வைக் குறைபாடு 'கிளௌகோமா' என்று அழைக்கப்படுகிறது.

புதிதாக பிறந்த குழந்தைகளிலும் கூட 'கிளௌகோமா' ஒரு பிறவி நோயாகக் கருதப்படலாம். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆபத்தில் உள்ளனர்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் ஒற்றைத் தலைவலி போன்ற குடும்ப வரலாறு கொண்டவர்கள் 'கிளௌகோமா'வினால் பாதிக்கப்படுகின்றனர்.

'கிளௌகோமா' அறிகுறிகள் மிக மெதுவாக உருவாகின்றன, அதனால்தான் பலருக்குப் பார்வை பிரச்சினைகள் ஏற்படும் வரை 'கிளௌகோமா'வை உறுதியான முறையில் கண்டறிவது கடினம். படிப்படியாக ஏற்படும் பார்வை பிரச்சினைகள் மற்றும் மங்கலான பார்வை கண் சிவத்தல் கண் மற்றும் இமை பகுதியில் வலி வாந்தி குமட்டல் கண்ணில் கருப்பு மற்றும் வெள்ளை ஒளியின் பிரகாசங்கள் மற்றும் நிழல்கள் தோன்றுதல்.

'கிளௌகோமா'வுக்கு முதல் சிகிச்சை மருந்து, இது கண்ணுக்கு வழங்கப்படும் திரவ மருந்து. இந்த மருந்து கண்ணில் உள்ள அழுத்தத்தை குறைத்து பார்வை நரம்புக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கிறது. நோயாளிகள் மருத்துவரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவது மிகவும் முக்கியம். மருத்துவர் நீண்ட நேரம் மருந்து எடுத்துக்கொள்ள அறிவுறுத்தினால், அதைப் புறக்கணிக்காதீர்கள். கண் அறுவை சிகிச்சை நிபுணர் மருந்துக்கான அளவை, நான்கு முதல் ஆறு மணி நேர இடைவெளியில் பரிந்துரைப்பார், மேலும் மருந்தைச் சரியான நேரத்தில் கண்ணுக்குள் செலுத்துவது அவசியம்.

'கிளௌகோமா' தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

யாருக்கு என்ன? நோய் ஏற்படுகின்றது. யார், எவ்வாறு இறக்கின்றனர் என்பது தொடர்பில் பலருக்கும் தெரியாது. ஆகையால், உணவு, உடற்பயிற்சி மற்றும் வைத்தியர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

மனிதனின் உறுப்புகளில் கண் மிக, மிக முக்கியமானது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். எனினும், கண்கள் இருந்து குருடர்களாய் பலரும் சமூகத்தில் இருப்பது வேதனையானது என்பதுடன், தொற்று நோய்களை விடவும் தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# கவனமாக கையாளப்பட வேண்டிய விவகாரம்

**மொஹமட் பாதுஷா**

இலங்கையின் பாதுகாப்பு தொடர்பாகப் பலவிதமான கருத்துகள் பொதுவெளியில் சொல்லப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதற்கிடையில் 'முஸ்லிம் அடிப்படைவாதம்' பற்றிய கதைகளும் உத்தியோகப்பூர்வமாக மேலெழுந்துள்ளன.

நாட்டின் பாதுகாப்பு பிரச்சினை என்பது ஐம்பது ஆண்டுகளாகக் கரிசனைக்குரிய விடயமாகவே இருக்கின்றது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு அண்மைக்காலமாக இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இது வேறு ஒரு உருவத்தை எடுத்திருப்பதான தோற்றப்பாடும் ஏற்பட்டுள்ளது.

ஆனால், வழக்கமாக ஏனைய அரசாங்கங்களைப் போலவே ஜனாதிபதி அனுரகுமார திசாயநாயக்க தலைமையிலான என்.பி.பி. அரசாங்கமும் தேசியப் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று சொன்னது. சொல்கின்றது.

கொழும்பின் நீதிமன்ற வளாகத்திலும் புறநகர்ப் பகுதிகளிலும் 'துப்பாக்கிகள்' சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்த போதும், அரசாங்கம் இப்படியொரு கருத்தையே வெளியிட்டது. அதாவது, "மக்கள் அச்சப்படும்படியான பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஒன்று இல்லை" என்றே அரசாங்கம் கூற வருவதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழலில்தான், முதலில் அரசாங்கம், கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் அடிப்படைவாத குழுக்கள் தோற்றம் பெறுவதாகவும், அது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலோ அல்லது நாட்டின் ஏனைய மாகாணங்களிலோ அடிப்படைவாதக் குழுக்களோ குற்றம் புரிவோரோ உருவாகின்றார்களா? என்பது பொது மக்களாகிய நமக்குத் தெரியாது. அரச இயந்திரம்தான் பாதுகாப்புப் படைகளையும் புலனாய்வுப் பிரிவையும் பயன்படுத்தி அதனைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அந்த வகையில், முன்கூட்டியே அரசாங்கம் இவ்வாறான அறிவிப்பொன்றை வெளியிட்டமை ஒரு வகையில் நல்லது என்றும் கூறலாம். ஏனெனில், முஸ்லிம்கள் இவ்வாறான குழுக்கள் ஏதும் உருவாகின்றதா? என்பது குறித்து அவதானமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவதற்கு இந்த அறிவிப்பு உதவியாக அமையக் கூடும்.

ஆயினும், முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்கள் என்று அரசாங்கம் கூறியுள்ளமை உண்மையிலேயே முஸ்லிம்களை மனக் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்றதைப் போன்ற இன்னுமொரு கசப்பான அனுபவம் தமக்கு ஏற்படப் போகின்றதா? என்ற சந்தேகமும் கணிசமான முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் எம்.பி. ஒருவர் குறிப்பிட்டிருந்ததைப் போல, எந்தவொரு மதத்திலும் இனத்திலும் அடிப்படைவாதம் அல்லது பயங்கரவாதம், தீவிரவாதம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட விடயம் அல்ல. எல்லா மதங்களும் அதனை ஒரு குற்றமாகவே நோக்குகின்றன. அமைதியையே போதிக்கின்றன.

இலங்கையில் முஸ்லிம் மக்களும் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய அமைப்புக்களும் அவ்விதமான 'வாதங்களுக்கு' ஒருபோதும் ஆதரவில்லை என்பதை நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். அதனை அரசாங்கமும் அறியும்.

எனவே, முன்னைய அரசாங்கங்களைப் போல, இந்த அரசாங்கமும் 'முஸ்லிம்' என்ற அடையாளப்படுத்தலுடன் ஏன் இந்த தகவலை வெளியிடுகின்றது என்ற கேள்வி எழாமல் இல்லை.

இலங்கையில் தனியான இன, மத பிரிவினைகள் இருக்கக் கூடாது என்றும், எல்லோரும் இலங்கையர் என்றும் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது, எல்லாவற்றையும் பொதுப்படையாக நோக்க வேண்டும், இன, மத ரீதியாக பிரித்து நோக்கக் கூடாது என்று என்.பி.பி. கூறியது.

அப்படிப்பார்த்தால், ஏன் முஸ்லிம் அடிப்படைவாதம் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் தெரியவில்லை. மீண்டும் அடிப்படைவாதம் தோற்றம் பெறுகின்றது என்றோ கிழக்கில் இருந்து அடிப்படைவாத குழுக்கள் தலைதூக்குகின்றன என்றோ நாசுக்காகச் சொல்லியிருக்கலாம்.

அல்லது, முஸ்லிம் என்று நேரடியாகச் சொல்லாமல், வேறு விதமாகக் குறிப்புணர்த்தியிருக்க முடியும். ஆனால், அதனை அரசாங்கம் செய்யத் தவறி விட்டது. அதன் மூலம் அரசாங்கம் எதனை எதிர்பார்த்தது என்பதும் புரியவில்லை.

அடிப்படைவாத குழுக்களை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்பதும், அது விடயத்தில் அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்க முஸ்லிம் சமூகம் தயாராக இருக்கின்றது என்பதிலும் மறு பேச்சில்லை.

ஆனால், ஒரு புலனாய்வுத் தகவலை நாசுக்காகச் சொல்வதற்கு அரசாங்கம் தவறியமை, எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது சுட்டுவிரல் நீட்டுவதற்கான முயற்சியாக அமைந்து விடுமே என்று ஒரு பகுதி முஸ்லிம்கள் அச்சப்படுகின்றனர்.

ஏனெனில், முஸ்லிம்களின் கடந்த கால அனுபவங்கள் அப்படிப்பட்டவை. முஸ்லிம்களுக்கு எதிரான இன வாதத்தைச் சூடாக்கியே மஹிந்த ஆட்சி செய்தார். முஸ்லிம்களைப் பயன்படுத்தியே கோட்டாவின் ஆட்சி நிறுவப்பட்டது.

இந்த வன்முறைகளாலும், பயங்கரவாத செயற்பாடுகளுக்கு 'சஹ்ரான்' போன்ற பயங்கரவாதிகள் ஒத்துழைப்பு வழங்கியமையாலும், ஒன்றும் அறியாத அப்பாவி முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சிக்கல்களும் அவமானமும் நெருக்கடிகளும் பாரதூரமானவை.

ஆனால், இனவாதத்தை முற்றாக இல்லாதொழித்து, இன நல்லிணக்கத்தைப் பேசியே அதன் மூலமே ஆட்சிக்கு வந்த அரசாங்கம் என்று என்.பிபியை சிறுபான்மை மக்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், அப்படியொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை என்னவோ போல் உள்ளது.

நாட்டில் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பெருகியுள்ளன. கொலைச் சூத்திரதாரியான செவ்வந்தியை மட்டுமன்றி, முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரியையே கைது செய்ய முடியாதுள்ளது.

வடக்கு, கிழக்கில் படைகள் குவிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ் எம்.பிக்கள் கூறி வருகின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்திற்கான நீதிக் கோரிக்கைகள், அழுத்தங்கள் மட்டுமன்றி, பட்டலந்த வதை முகாம் சர்ச்சைகளும் கிளறப்பட்டுள்ளன.

ஞானசார விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவரும் தன்பங்கிற்கு சில கதைகளைக் கூறத் தொடங்கியுள்ளார். மிக முக்கியமாக, இதற்கிடையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் வருகின்றது.

எனவே, கிழக்கில் அடிப்படைவாதக் குழுக்கள் உள்ளன என்பது உண்மையாகக் கூட இருக்கலாம். அதனை அரசாங்கம் சரிவர தேடியறிந்த உறுதி செய்ய வேண்டும். அது வேறு விடயம்.

ஆனால், முஸ்லிம் என்ற அடைமொழியுடன் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் மேலே கூறப்பட்ட நாட்டு நடப்புக்களுக்கும் ஏதாவது தொடர்பிருக்குமா? என்ற ஐயப்பாடுகள் சமூக வலைத்தளங்களில் பரவிக்கிடக்கின்றன.

கிழக்கில் அல்லது முஸ்லிம்களுக்கு மத்தியில் அடிப்படைவாத குழுக்கள் இல்லை என்று இப் பத்தி கூற முற்படவில்லை. நாட்டின் எப்பாகத்திலும் எப்படியான குழுக்களும் உருவாகினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நாம் கண்ட யதார்த்தமாகும்.

குறிப்பாக, முஸ்லிம்களுக்குள் இருந்த பிழையாக வழிநடத்தப்பட்ட சஹ்ரான் கும்பல்தான் முஸ்லிம் சமூகம் நினைத்திராத சந்தர்ப்பத்தில் ஒரு பெரிய பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது என்பதைக் கண்டோம்.


அதன் சூத்திரதாரிகள் யாராக இருந்தாலும், இந்த பயங்கரவாதிகள் அதற்குத் துணைபோயிருக்கின்றார்கள் என்பது பட்டவர்த்தனமானது. எனவே, ஆழமாகத் தேடிப் பார்க்காமல், எடுத்த எடுப்பில் முஸ்லிம்களுக்குள் அப்படியான குழுக்கள் எதுவும் இல்லை என்று நாம் கூறி விட முடியாது. அதனை அரசாங்கமே கூற வேண்டும்.

சமூக விரோத குழுக்கள் எதுவும் எந்த இனக் குழுமத்திற்குள் இருந்தாலும் அதனைக் கண்டறிந்து கட்டுப்படுத்த வேண்டியது அரச இயந்திரத்தின் தலையாய கடமையாகும். அடிப்படைவாதிகளுக்காகப் பயங்கரவாதிகளுக்காக எந்த சமூகமும் பரிந்து பேசப் போவதில்லை.

ஆனால், முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்கள் என்று கூறியதன் மூலம் ஏனைய இன மக்கள் கிழக்கு முஸ்லிம்களை ஒருவித சந்தேகக் கண்கொண்டு பார்க்கலாம் என்ற உணர்வு உருவாகியுள்ளது. இதனைப் பயன்படுத்தி கடந்த காலத்தைப் போல, நாம் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுமா? என்ற அச்சமும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

எனவே, என்ப.p.பி. அரசாங்கம் இவ்விடயத்தை இன்னும் பக்குவமாக கையாள வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிம்களை மையப்படுத்திய நகர்வுகள் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் போல இந்த அரசாங்கமும் செயற்பட்டு விடக் கூடாது.

மறுபுறுத்தில், முஸ்லிம்களுக்குள் இப்படியான பிறழ்வான, தீவிரபோக்குள்ள குழுக்கள் உருவாகுமாயின் அதனை கட்டுப்படுத்த முஸ்லிம் மக்கள் அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதுடன், இவ்விவகாரத்தை மிகவும் புத்திசாலித்தனமாகவும் கவனமாகம் கடந்து செல்ல வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

வண்டியை நிறுத்த தெரியாதவர்கள் அதை ஓட்டுவதற்கு முற்படக்கூடாது. இத்தகைய நபர்களுக்குக் கூட, வாகன அனுமதிப்பத்திரம் கிடைத்துவிடுகின்றது.

வாகனத்தை நிறுத்த தெரியாமல், வேகத்தைக் கூட்டும் கருவியை அழுத்துவதால் பல ஆபத்துகள் சம்பவித்த வண்ணம் இருக்கின்றன.

வாகனங்களை ஓட்டும் போது, தங்களை விட்டால் எவரும் இல்லை என்ற எண்ணத்தில், கர்வமாக ஓட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். நடைபாதை வாகனங்களை ஓட்டுவதற்காக இல்லை. கோபப்படுபவர்கள், விபத்தில் இறப்பவர்கள் பற்றி யோசிப்பது இல்லை. ஒருவரின் உயிர் பிரிந்தால், அவரின் குடும்பத்தின் நிலைமை என்னாவது?

நடந்து சென்று வீதியைக் கடப்பதற்கு மஞ்சள் கோட்டில் நின்றாலும் வாகனங்களை நிறுத்தாத ஆணவக்காரர்களை கைதுசெய்வதும் இல்லை. சுயநலமே உலகமா?

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீருக்கு திண்டாடும் போட்மோர் மக்கள்

அக்கரப்பத்னை- போட்மோர் தோட்டத்தில் அடிப்படை வசதிகள் அற்ற வாழ்ந்த சுமார் 81 குடும்பத்திற்கு 2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த பழனி திகம்பரம் பணிப்புரைக்கமைவாக இந்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் வீடுகள் அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சராக ஜீவன் தொண்டமான் பொறுப்பை ஏற்றதோடு வீடுகள் அமைக்கும் பணியை அந்த அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

மக்களுக்கு சுத்தமான குடிநீர் பெற்றுக் கொடுப்பதற்காக நீர் குழாய்கள் நீர்த் தாங்கிகள் பொருத்தப்பட்ட போதும், இதுவரை அந்த குழாய்களில் மூலம் நீர் வழங்கப்படவில்லை எனவும் நீர்த் தாங்கியும் பழுதடைந்து உடைந்து அதில் இருந்து நீர் கசிந்து வெளியேறுவதால் நீர் சேமித்து வைக்க முடியாமல் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

81 வீடுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் இதுவரை 53 குடும்பங்கள் மாத்திரம் எவ்வித அடிப்படை வசதியற்ற நிலையில் புதிய வீட்டில் குடியேறியுள்ளனர். மக்களின் நலன் கருதி அரசு அதிகாரிகள் உடனடியாக அவர்களின் பிரச்சினையை ஆராய்ந்து அதற்கு ஒரு தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

–துவாரக்ஷான்

# “தாய், தந்தை இல்லாத பாடசாலைகள்”



கடந்த அரசாங்கத்தினால் தேசியப் பாடசாலைகளாக அறிவிக்கப்பட்ட மாகாண பாடசாலைகள், தாய், தந்தை இல்லாத பிள்ளைகள் போன்ற நிலைமைக்கு மாறியுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அந்தப் பாடசாலைகள் மத்திய கல்வி அமைச்சின் கீழா அல்லது மாகாண சபையின் கீழா இருக்கின்றன என்ற கேள்விகள் எழுவதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

கல்வி மறுசீரமைப்பின் போது கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படும் என்றும் 9ஆம் தரத்திற்காக புதிய பரீட்சையொன்றை அறிமுகப்படுத்தப் போவதாகவும் பிரதி அமைச்சர் கூறினார். அவ்வாறு அந்த வகுப்புக்கு புதிய பரீட்சையொன்றை அறிமுகப்படுத்துவதென்றால் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு என்ன செய்யப் போகின்றீர்கள். அது இல்லாமல் செய்யப்படுமா?அதேபோன்று சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என்பதனையும் கூறுங்கள். அது நல்ல விடயமென்றால் அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தினால் மாகாண சபைகளின் ஆயிரம் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தில் இருந்தாலும், அந்த தீர்மானம் தொடர்பில் நான் திருப்பதியாக இருக்கவில்லை. அந்த பாடசாலையின் பெயர்ப் பலகைக்காக 10 இலட்சம் ரூபாவும் இணையத்தளத்திற்காக 10இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது. ஆனால் ஆசிரியர்களும், பிள்ளைகளும் தேசிய பாடசாலை என்ற மகிழ்ச்சியில் இருந்ததுடன், இப்போதும் தேசிய பாடசாலை என்றே கல்வி அலுவலகங்களுக்குக் கடிதங்கள் போகின்றன. ஆனால் அவ்வாறு பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இந்த பெயர் நீக்கப்பட்டது. இப்போது அந்தப் பாடசாலைகள் தாய், தந்தை இல்லாத பாடசாலைகள் போன்று ஆகிவிட்டது என்றார்.



# “ஐந்து திட்டங்கள் ஊடாக கல்வி துறை மறுசீரமைப்பு”

பாடத்திட்டங்களை மாத்திரம் மறுசீரமைப்பது கல்வி மறுசீரமைப்பாகக் கருதப்படமாட்டாது என தெரிவித்த கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்துறை அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஐந்து திட்டங்கள் ஊடாக கல்வித் துறையை மறுசீரமைக்கத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் காலம் காலமாகப் பேசப்படுகிறது. பாடத்திட்டங்களை மாத்திரம் மறுசீரமைப்பதைக் கல்வி மறுசீரமைப்பு என்று கருத முடியாது. பாடத்திட்டம் மறுசீரமைப்பு, மனித வள அபிவிருத்தி, அடிப்படை சுகாதார வசதிகள், கல்வி நடவடிக்கை மீளாய்வு, பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி உள்ளிட்ட ஐந்து வழிமுறைகள் ஊடாக கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் வரவு-செலவுத் திட்டத்தில் இம்முறை கல்விக்கு 619 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு எதிர்வரும் எட்டு மாத காலத்திற்குரியதாகும் .

கல்வி மீளாய்வு நடவடிக்கைகள் அவசியம். நவீன உலகுக்குப் பொருத்தும் வகையில் பாடவிதானத்துடன் தொடர்புடைய மீளாய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் பொறுப்பு பரீட்சைகள் திணைக்களத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செலவுகளில் பரீட்சைகள் திணைக்களத்துக்கு இம்முறை 12,360 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி முறைமை நவீன உலகுக்கும், தொழிற்றுறைக்கும் சாதகமான அமைய வேண்டும். ஒரு சில பல்கலைக்கழகங்களில் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகவே பீடங்களும், கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் மாணவர்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை என்றார்.



# “இளம்பராயத்தை அனுபவிக்க தடையாகவுள்ளது”

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்கள் பிள்ளைகளின் இளம்பராயத்தை அனுபவிப்பதற்குத் தடையாகவுள்ளது என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பி. ஹர்ஷன ராஜகருண, இவ்விடயத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியில் உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஆரம்ப பிரிவு பாடசாலைகள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டதாகவே காணப்படுகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் இந்த புலமைபரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டுள்ளனர் .இதனால் மாணவர்கள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகுகின்றனர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றம் ஏற்படுத்துவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், அது குறித்து தற்போது எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒரு சில தனியார் பாடசாலைகளில் ஒன்று முதல் மூன்றாம் தரம் வரை மாணவர்களுக்கு எவ்வித பரீட்சைகளும் கிடையாது.

**“பல அழுத்தங்களுக்கு மத்தியில் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளில் பெரும்பாலானோர், கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவதில்லை. ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டதன் பின்னர், கல்வி மீதான அக்கறை இல்லாமல் போகிறது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்**

பொதுவான பாடத் திட்டங்களுடனான பயிற்சிகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. பிள்ளைகள் இளம்பராயத்தை அனுபவிப்பதற்குப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்கள் தடையாகக் காணப்படுகின்றன. பல அழுத்தங்களுக்கு மத்தியில் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளில் பெரும்பாலானோர், கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவதில்லை. ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டதன் பின்னர், கல்வி மீதான அக்கறை இல்லாமல் போகிறது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



# அபிநயாவுக்கு ‘டும்’

நடிகை அபிநயாவுக்கும், அவரின் காதலருக்கும் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. நிச்சயதார்த்தத்தின்போது, எடுக்கப்பட்ட புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு தனக்கு நடந்த நல்ல விடயம் குறித்து அபிநயா தெரிவித்திருக்கிறார்.

சமுத்திரக்கனி இயக்கிய ‘நாடோடிகள்’ படம் மூலம் தமிழ் திரையுலகிற்கு வந்த அபிநயா, தொடர்ந்து வித்தியாசமான கதைகளாகத் தெரிவு செய்து நடித்து வருகிறார். இந்நிலையில், அபிநயாவுக்கு நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறது. மோதிரம் மாற்றிய பிறகு கைகளை மட்டும் புகைப்படம் எடுத்து இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறேன் என அபிநயா தெரிவித்துள்ளார்.

# தமிழுக்கு வந்த மீரா



மலையாளத்தில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருந்தவர், மீரா ஜாஸ்மின் (வயது43). கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பல படங்களில் நடித்துள்ள அவர், லிங்குசாமி இயக்கத்தில் மாதவன் நடித்த ‘ரன்’ என்ற படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். மலையாளத்தில் 2003ல் வெளியான ‘பாடம் ஒண்ணு: ஒரு விலாபம்’ என்ற படத்துக்காக, சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்றார்.

திருமணத்துக்கு பிறகு திரையுலகை விட்டு விலகியிருந்த மீரா ஜாஸ்மின், திடீரென்று தனது சமூக வலைத்தளங்களில் கவர்ச்சியான போட்டோக்களை வெளியிட்டு ரசிகர்களை அதிர வைத்தார். இந்நிலையில், ஏப்ரல் 4ம் திகதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் ஒளிபரப்பாகும் ‘தி டெஸ்ட்’ என்ற படத்தில் மாதவன், நயன்தாரா, சித்தார்த் ஆகியோருடன் இணைந்து அவர் நடித்துள்ளார். இதை ஒய்நாட் ஸ்டுடியோஸ் எஸ். சஷிகாந்த் தயாரித்து இயக்கியுள்ளார்.



# ’வேற லெவல் உணர்வு’

தென் இந்திய படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தவர் ரகுல் பிரீத் சிங். இவர் தமிழில் ‘தடையற தாக்க’, ‘என்னமோ ஏதோ’, ‘ஸ்பைடர்’,‘ தீரன் அதிகாரம் ஒன்று’, ‘இந்தியன் 2’, ‘அயலான்’, ‘தேவ்’, ‘என்ஜிகே’ உட்பட பல படங்களில் நடித்துள்ளார். இப்போது அஜய் தேவ்கன் மற்றும் ஆர்.மாதவனுடன் ‘தே தே பியார் தே 2’ என்ற இந்தி படத்தில் நடித்து வருகிறார். மேலும், இவரது நடிப்பில் ‘இந்தியன் 3’ படம் விரைவில் வெளியாகவுள்ளது.

தமிழ் மட்டுமல்லாமல், இந்தி, தெலுங்கு, கன்னட மொழி படங்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில், நடிகை ரகுல்பிரீத் சிங் மாலத்தீவுக்குச் சுற்றுலா சென்றிருக்கிறார். அங்கு குடும்பத்தோடு பொழுதுபோக்கியதைப் புகைப்படம் வெளியிட்டுத் தெரிவித்துள்ளார். அதனுடன் ஒரு பதிவையும் வெளியிட்டுள்ளார். அதில்,

‘வாழ்க்கையில் நமக்கு முக்கியமானவர்கள் நம்மைச் சுற்றி இருக்கும்போது ஜாலியா இருப்பது வேறலெவல் உணர்வு’ என்று கூறி இருக்கிறார்.

# “சினிமாவில் ஆணாதிக்கம்”



தமிழில் ‘36 வயதினிலே’ படத்தின் மூலம் ரீ-என்ட்ரியான ஜோதிகா, சினிமாவில் நான் நிறைய விஷயங்களுக்கு ‘நோ’ என்று சொல்லியிருக்கின்றேன். நான் நடிக்க ஆரம்பித்து 10 வருடங்களுக்குப் பின்பு, அனைத்து தென்னிந்திய நடிகர்களுடனும் இணைந்து நடித்த பின்பு, எனது 28 வயதுக்குப் பின்பு, சில படங்களுக்குத் தான் ஓ.கே. சொல்லி நடித்தேன். அது மிகவும் கவனமான ஒரு முடிவு.

தென்னிந்திய படவுலகில் இருந்து நான் வருகிறேன். அங்கு ஆண்களை முன்னிலைப்படுத்திய படங்கள்தான் அதிகமாக வெளியாகும். இப்போது இங்கு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது போல், பாலிவுட்டிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் பெரும்பாலும் ஆண்களுக்காகத்தான் அதிகமான கதைகள் எழுதப்படுகின்றன. அதில் பெண்கள் கதாபாத்திரம் முழுமையானதாகவே

கனடா

## கனடாவின்
# புதிய பிரதமர் தெரிவு



கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாக கனடா தற்போது பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. மேலும், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், கனடா பொருட்களுக்கு வரியை அதிகரிப்பது தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இது கனடா அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ(வயது 53), தனது பதவியை இராஜினாமா செய்வதாக கடந்த ஜனவரி மாதம் அறிவித்தார். லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கனடாவின் பிரதமராகப் பதவியேற்றார். அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து, லிபரல் கட்சியின் அடுத்த தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

இதில் 59 வயதான மார்க் கார்னி 1,31,674 வாக்குகள் பெற்று 85.9 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கிறிஸ்டியா பிரீலாண்ட் 11,134 வாக்குகளும், கரீனா கோல்ட் 4,785 வாக்குகளும் பெற்றனர்.

இதன் மூலம் லிபரல் கட்சியின் புதிய தலைவராகவும், கனடாவின் 24ஆவது பிரதமராகவும் மார்க் கார்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மார்க் கார்னி, கடந்த 2008 முதல் 2013 வரை கனடா வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்தார். அதோடு, 2011 முதல் 2018 வரை நிதி நிலைத்தன்மை வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சமாளிக்க மிகவும் நம்பகமான அரசியல்வாதியாக கனடா நாட்டு மக்கள் அவரை அங்கீகரிப்பதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

மார்க் கார்னி ஒருமுறை டொனால்ட் டிரம்ப்பை ‘ஹாரி பாட்டர்’ கதையில் வரும் வில்லன் கதாபாத்திரமான வோல்டெமார்ட்டுடன் ஒப்பிட்டுப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தாலி

# பிரான்சிஸின் உடல்நிலை முன்னேற்றம்



கடந்த மூன்று வாரமாக சிகிச்சை பெற்று வரும் கத்தோலிக்க திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக, ஜெமெல்லி வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தனக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள், செவிலியர்களுக்கு போப் பிரான்சிஸ் நன்றி தெரிவித்தார். தனக்காகப் பிரார்த்தனை செய்து கொண்ட அனைவருக்கும் நன்றி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் (88), மூச்சுக்குழாய் அழற்சி காரணமாகக் கடந்த 14ஆம் திகதி ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# கூரை இடிந்து விழுந்ததில் அறுவர் பலி




பாகிஸ்தானில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தான் முகாமில் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 6 பேர் உயிரிழந்ததுடன், 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் கராச்சிக்கு உட்பட்ட புறநகர்ப் பகுதியில் ஆப்கானிஸ்தான் மக்களுக்கான முகாம் ஒன்று அமைந்துள்ளது.

இதில் இருந்த வீடு ஒன்றின் மேற்கூரை, ஞாயிற்றுக்கிழமை (9) திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இதில் சிக்கி, பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகியுள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர்.

காஷ்மீர்

## முரளிதரனுக்கு இலவசமாக
# காஷ்மீரில் நிலம் ஒதுக்கீடு?

காஷ்மீரில், இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுக்கு இலவசமாக நிலம் ஒதுக்கப்பட்டதாக வெளியான தகவல் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், செவ்லான் குளிர்பான நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனம், காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் ரூ. 1,500 கோடியில் அலுமினியம் பாட்டில் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க 25.75 ஏக்கர் நிலம் இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் போடப்பட்டுள்ளது. தற்போது, இந்த விவகாரம் வெளியாகி சட்டசபையில் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநில சட்டசபையில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் கேள்வியாக எழுப்பி உள்ளன. இந்த கேள்விக்கு முதலமைச்சர் உமர் அப்துல்லா பதிலளிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது பற்றி விவசாயத்துறை அமைச்சர ஜாவித் அகமது தார் கூறுகையில்,

இந்த விவகாரம் என்பது வருவாய் துறை சம்பந்தப்பட்டது. இதுபற்றி எங்களிடம் எந்த தகவலும் இல்லை. இந்த விவகாரத்தின் உண்மைத் தன்மை பற்றி விசாரிக்கிறோம்” என்றார்.



தற்போது இந்த விவகாரம் காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லாவுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக முத்தையா முரளிதரன் நம்நாட்டில் தனது தொழிலை விரிவுபடுத்தும் வகையில் கடந்த கடந்த ஆண்டு கர்நாடகாவில் ரூ.1,400 கோடி முதலீடு செய்வதாக அறிவித்தார்.

இதையடுத்து, கர்நாடக அரசு சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் 46 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலை அமைப்பதற்கான நிலத்தை ஒதுக்கீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசம்

## கும்பமேளாவில்
# தாக்குதலுக்கு திட்டமிட்ட நபர் கைது

“கும்பமேளாவில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினால் வெளிநாட்டில் சிறந்த வாழ்க்கை அமைத்துத் தருவதாக உறுதி அளித்தனர்” என, உத்தரப் பிரதேசத்தில் கைதான நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் கும்பமேளாவில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாக, பப்பர் கல்சா இன்டர்நேஷனல் (பிகேஐ) ரீஎர்ச்சியாளரான லஜர் மசி (வயது 29) கடந்த 6ஆம் திகதி உத்தரப்பிரதேசத்தின் கவுஷாம்பி நகரில் கைது செய்யப்பட்டார். அவரிடம் உத்தரப்பிரதேச சிறப்பு அதிரடிப்படையினர் (எஸ்டிஎப்) விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து எஸ்டிஎப் அதிகாரி ஒருவர் கூறியதாவது, “பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரை அடுத்த குர்லியான் கிராமத்தைச் சேர்ந்த லஜர் மசி, 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். பின்னர் விவசாய வேலை செய்துள்ளார். அப்போது உள்ளூர் போதைப்பொருள் கும்பலுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் ஹெராயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளார். இதனிடையே, ஜெர்மனியின் பிகேஐ அமைப்புடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது.






## சம்பியன்ஸ் கிண்ணம்: நியூசிலாந்தை வென்று
# சம்பியனாகியது இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனாகியது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் இன்று நடைபெற்ற நியூசிலாந்துடனான இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே மூன்றாவது தடவையாக சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனாகியது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, வருண் சக்கரவர்த்தி (2), குல்தீப் யாதவ் (2), இரவீந்திர ஜடேஜா, மொஹமட் ஷமியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் டரைல் மிற்செல் 63 (101), மிஷெல் பிறேஸ்வெல் ஆட்டமிழக்காமல் 53 (40), றஷின் றவீந்திர 37 (29), கிளென் பிலிப்ஸ் 34 (52) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 252 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 76 (83), ஷ்ரேயாஸ் ஐயரின் 48 (62), லோகேஷ் ராகுலின் ஆட்டமிழக்காத 34 (33), ஷுப்மன் கில்லின் 31 (50), அக்ஸர் பட்டேலின் 29 (40) ஓட்டங்களோடு 49 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பிறேஸ்வெல் 2, அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர் 2, றவீந்திர மற்றும் கைல் ஜேமிஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக ஷர்மா தெரிவானார்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:
# சமநிலையில் ஆர்சனல் – யுனைட்டெட் போட்டி
### லிஸ்டரை வென்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை டெக்லான் றைஸ் பெற்றதோடு, யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை புரூனோ பெர்ணாண்டஸ் பெற்றார்.


இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லிஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது. செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க் குகுரெல்லா பெற்றிருந்தார்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது.

55 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 51 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 49 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் செல்சியும் காணப்படுகின்றது. இதில் மற்றைய அணிகளை விட லிவர்பூல் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

## ஸ்பானிய லா லிகாத் தொடர்:
# கெட்டாஃபேயிடம் தோற்ற மட்ரிட்



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், கெட்டாஃபேயின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் சொர்லொத் பெற்றதோடு, கெட்டாஃபே சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் மௌரோ அரம்பரி பெற்றிருந்தார். லா லிகா புள்ளிகள் பட்டியலில் தலா 57 புள்ளிகளை பார்சிலோனாவும், நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டும் பெற்றுள்ளபோதும் அவற்றுக்கிடையேயான போட்டி முடிவுகளின்படி முதலாமிடத்தில் பார்சிலோனாவும், இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டும் காணப்படுகின்றன. 56 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 49 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன. இதில் பார்சிலோனா மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 11, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.